**I Additional District Court, Thoothukudi.**

**O.S.No.197/2022 நாள் : 18.06.2026 வா.சா.1– திருமதி. இந்திராணி**

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். இறந்துபோன சகோதரர் ராமச்சந்திரனுக்கு வாரிசுகள் இல்லை என்பதால் அவருடைய சொத்து குறித்து பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். அவர் 10.01.2022 ல் இறந்தார். அவர் இறக்கும் வரையில் அவர் சம்பாதித்த சொத்துக்களை அவர்தான் அனுபவித்து வந்தார். ராமசந்திரன் உயில் எழுதி வைத்துவிட்டு இறந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் பெயர் மாரியப்பன். தாயார் பெயர் மஞ்சளையம்மாள். என் பெற்றோர் உயில் எழுதிவைத்துவிட்டு இறந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1 ம் தபசில் சொத்து என் தகப்பனாருக்கு சுயமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்து குறித்து என் அண்ணன் ராமச்சந்திரனுக்கு என் தகப்பனார் 16.06.1976 ல் ஒரு உயில் எழுதிவைத்தார் என்றால் சரிதான். 2 ம் அயிட்ட சொத்து எவரெஸ்ட் மாரியப்ப நாடார் அறக்கட்டளைக்குள் உள்அடங்கிய பள்ளிக்கட்டிடங்கள் என்றால் சரிதான். 2 முதல் 5 தபசில் சொத்துக்கள் என் அண்ணன் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள். 2 ம் தபசில் சொத்தை 7 ம் பிரதிவாதிக்கு மேற்படி ராமச்சந்திரன் 26.02.2009 தேதியிட்ட உயில் மூலம் எழுதிகொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நாங்கள் அனைவரும் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்துக்களுக்கு வருவாய் துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று ஞாபகமில்லை. தாவா சொத்தில் வீடுகள் மற்றும் கட்டிடங்கள் பல உள்ளன. மேற்படி கட்டிடங்களுக்கு யார் வரி செலுத்துகிறார்கள் என்று பலமுறை கேட்டும் சாட்சி பதிலளிக்கவில்லை. 2 ம் தபசில் சொத்தில்

உள்ள கல்வி அறக்கட்டளையில் இருந்து என்னை நீக்கியதால் நான் 7ம் பிரதிவாதியின் மகன் மீது முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.16/2024 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறக்கட்டளைதாரர் 7ம் பிரதிவாதியின் மகன்தான் என்றால் சரிதான். பள்ளியை நிர்வகிப்பதும் 7ம் பிரதிவாதியின் மகன் என்றால்சரிதான். தாவா சொத்துக்களை நான் கூட்டாக அனுபவித்து வருவதாக சொன்னால் அந்த கேள்விக்கு சாட்சி பதிலளிக்கவில்லை.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

தூத்துக்குடி